# முஸ்லிம் சமூகத்தில் அதிகரித்துவரும் விவாகரத்தும் அதற்கான தீர்வாலோசனைகளும்: கலுத்துறை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

Nisfa Muzammil

Ahamad Ibrahim Kulliyah of Laws , International Islamic University Malaysia (amna7201@gmail.com)

**1. ஆய்வுச் சுருக்கம் :** மனிதனை இவ்வுலகில் படைக்கச்செய்த அல்லாஹ் அவன் சீரிய வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக ஏனைய அனைத்தையும் அவனுக்கு துணையாக படைத்து மனிதன் நலன் பெற வேண்டும் என நாடினான். தனது கட்டளைகளையும் நேர்வழிகாட்டல்களையும் மனிதர்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்காக காலத்துக்குக் காலம் நபிமார்களையும் ரஸுல்மார்களையும் அனுப்பி வைத்தான். அவர்களினூடாக வேதங்களையும் வேதக்கட்டளைகளையும் அருளினான். அவ்வகையில் வாழ்வின் அனைத்து துறைகளுக்குமான வழிகாட்டல்களை அவன் வகுத்துத் தந்துள்ளான். ஒரு சம்பூரணமான சிறந்த வாழ்க்கைத் திட்டத்தினுள்ளே மனிதனை சேர்த்து வாழச்செய்வது அவனது நோக்கமாக இருக்கின்றது. அவ்வகையில் மனிதனது குடும்ப வாழ்வோடு தொடர்புடைய திருமணம், விவாகரத்து, பராமரிப்பு என்பனவும் அவனது திட்டமான வழிகாட்டுதலில் இல்லாமலில்லை. திருமணம் முடிப்பது என்பது இஸ்லாத்தைப் பொருத்தவரையில் கட்டாயக் கடமை. அவ்வாறு நடைபெற்ற திருமணமானது கணவன் மனைவிக்கிடையில் ஒத்துப்போகாவிடில் அல்லது வேறு ஏதேனும் தகுந்த காரணங்களுக்காக அத்திருமணத்திலிருந்து விலக்குப் பெறுவது இஸ்லாத்தில் கூடும். அதற்கு அனுமதியுண்டு. ஆயினும் அல்லாஹ் அனுமதிக்கப்பட்டவற்றில் தனக்கு மிக வெறுப்புக்குரியது தலாக் என ஹதீஸ் குறிப்பிடுகின்றது. ஆயினும் தற்கால முஸ்லிம் சமூகத்தில் விவாகரத்துக்களின் சடுதியான அதிகரிப்பை காணலாம். பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமான பிரச்சினைகளின் போதுகூட கணவனும் மனைவியும் விவாகரத்தை மட்டுமே வேண்டி நிற்பதனை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாய்வானது முதற்தர தரவுகளான நேர்காணல், அவதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் களுத்துறை பிரதேசத்தில் தற்காலத்தில் மிக அதிகமானோர் விவாகரத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.இதற்கான காரணங்களை கண்டறிந்து, இத்தகைய நிலைமையை தடுப்பதற்காக எதிர்காலத்தில் என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்பது தொடர்பான முன்மொழிவுகளையும் இந்த ஆய்வு முன்வைக்கின்றது.

கலைச் சொற்கள்: இஸ்லாமிய திருமணம், முஸலிம் சமூகம், விவாகரத்து

## 02. ஆய்வின் அறிமுகம்

இப்பூவுலகையும் விண்ணுலகையும் இவற்றிலுள்ள அனைத்து சிருஷ்டிகளையும் மனிதனது வாழ்வாதாரத்திற்காகவும் அவனது சுபீட்சத்துக்காகவும் தனிப்பெரும் கிருபையாளன் அல்லாஹுத்தஆலா ஒருவனே படைத்தான். இவற்றை அனுபவிக்கும் ஆற்றலையும் திறனையும் அவனே மனிதனுக்கு வழங்கினான். மனித வர்க்கத்தின் தொடக்கம் நபி ஆதம்

(அலை) அவர்களிலிருந்தும் அவர்தம் மனைவி ஹவ்வா (அலை) அவர்களிலிருந்தும் ஆரம்பமாயிற்று என்பதே உண்மை. இவ்விருவரையும் அல்லாஹுத்தஆலா சுவனத்தில் கணவன் மனைவியாக வாழச் செய்தான் என அல்குர்ஆன் பிரஸ்தாபிக்கின்றது.

எவரிடம் விவாகம் செய்வதற்கான வசதியும் உடற்பலமும் இருக்கின்றதோ அவர் நிகாஹ் செய்து கொள்வது சுன்னத்தாகும். எவரிடம் நிகாஹ் செய்து கொள்வதற்கான வசதியும் உடற்பலமும் இல்லையோ அவர் நிகாஹ் செய்து கொள்வது மக்றூ.ஃ. ஆகும்.

திருமணம் என்பது ஒரு வாழ்க்கை ஒப்பந்தமாகும். இதன்மூலம் கணவன் மனைவியிடையே மன அமைதியை ஏற்படுத்தி அவ்விருவருக்கிடையே அன்பினையும் பாசப் பிணைப்பையும் உண்டாகச் செய்து இம்மை வாழ்வை மகிழ்ச்சியுடன் திகழச் செய்வதுடன் மறுமை வாழ்வை நோக்கி வெற்றிநடை போடச் செய்வதாகும்.

திருமணத்தின் மூலம் கண்களும் இன உறுப்புக்களாகிய மறைவிடங்களும் பாதுகாக்கப் பெறுவதுடன் உள்ளத்தில் தீய உணர்வுகள் எழுவதிலிருந்தும் பாதுகாப்பு கிடைப்பதுடன் அல்லாஹ்வை மன ஓர்மையுடன் வணங்கிடவும் வழிவகுக்கும்.

ஆனால் தற்கால முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் திருமணம் என்ற விடயம் மிகவும் சாதாரணமான ஒரு விடயமாகவே நோக்கப்படுகின்றது. ஆரம்பமாக அதிகம் செலவு செய்து திருமண நிகழ்வை நடாத்துவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் அவர்கள் அதனை வாழ்நாள் முழுவதும் வெற்றிகரமாக கொண்டு செல்வதில் கரிசனை செலுத்துவதில்லை. சிறு சிறு தவறுகளுக்கு கூட காதி நீதிமன்றங்களை நாடுவோரே இங்கு அதிகம்.

இதுவல்ல இஸ்லாத்தின் வழிமுறை. வெற்றிகரமானதொரு திருமண ஒப்பந்தத்தினூடாக சிறந்ததொரு சமுதாயத்தை உறுப்பெறச் செய்வதே இஸ்லாத்தின் இலக்கு. கரம்பிடித்த மணப்பெண்ணையும் பிள்ளைகளையும் சுவனம்வரை அழைத்துச் செல்வதே கணவனது பொறுப்பு. ஆயினும் தற்போதைய நிலைமை மிகவும் மோசமானதாக காணப்படுகின்றது.

களுத்துறை பிரதேசத்தைப் பொருத்தவரையில் கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு விவாகரத்து தொடர்பான வழக்குகள் அதிகம் பதியப்பட்டுள்ளன. குறிப்பாக திருமணம் முடித்து குறைந்தது ஆறு மாதத்திற்குள் விவாகரத்திற்கு விண்ணப்பிப்பவர்களே ஏராளம். 2021 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மார்ச் வரையான மூன்று மாத காலப்பகுதிக்குள் நான்கு தலாக் பதியப்பட்டுள்ளது.

இது களுத்துறை முஸ்லிம் சமூகத்தின் ஆரோக்கியமான ஒரு போக்கிற்கான அறிகுறியல்ல. ஆகவே இதற்கான காரணங்களை கண்டறிந்து களுத்துறை பிரதேசத்தில் விவாகரத்து இடம்பெறுவதை தடுப்பதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதாகவே இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

## 03. ஆய்வுப் பிரச்சினை

இஸ்லாத்தில் திருமணம் என்ற விடயம் சிறந்ததொரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆயினும் தற்கால தம்பதிகள் அதன் புனிதத்தன்மையை மறந்து மிக இலகுவாக விவாகரத்திற்கு விண்ணப்பித்து விடுகின்றனர். அதற்கான காரணங்களை

கண்டறிந்து கஞத்துறை பிரதேசத்தில் அதனை குறைப்பதற்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

**04. ஆய்வு முறை**

இந்தப் பண்புசார் ஆய்வுக்கான தகவல்கள் இரு வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டன.

**(அ) அவதானம்**

ஆய்வுப் பிரதேசத்தில் நீண்ட காலம் ஆய்வாளர்கள் வசித்துள்ள நிலையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

**(ஆ) நேர்காணல்**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள புத்திஜீவிகளிடமும் சமூகத் தலைவர்களிடமும் இது தொடர்பாக நேர்காணல் செய்து பெற்ற தகவல்களும் இதற்கு உதவின.

இவ்வாறு முதற்தர தரவுகளைக் (Primary Data) கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு விவாகரத்து வழக்குகள் அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் கண்டறியப்பட்டது. கஞத்துறை பிரதேச மக்களின் சடுதியான இவ்வதிகரிப்பை குறைப்பதற்கான ஆலோசனைகளும் நோக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட சில முன்மொழிவுகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**05. ஆய்வின் இலக்குகள்**

- கஞத்துறை பிரதேச மக்களிடையே அதிகரித்து வரும் விவாகரத்து வழக்குகளுக்கான காரணங்களை கண்டறிதல்.
- இஸ்லாமிய வழிகாட்டுதல்களினூடாக இதனை குறைப்பதற்கான வழிவகைகளை பரிந்துரைத்தல்.

**06. திருமணம் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு**

படைப்புகள் அனைத்தும் இணைகளாக இருத்தல் என்பது ஏக இறைவனின் பொது நியதி ஆகும். மனிதன், மிருகம், தாவரங்கள் என்று எதுவும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அல்லாஹ் கூறுகின்றான்.

**மேலும் நாம் ஒவ்வொருவரையும் இணைகளாய்ப் படைத்திருக்கின்றோம். நீங்கள் இதிலிருந்து படிப்பினை பெறக்கூடும். (51: 49)**

இனவிருத்தி அடைவதற்கும் வம்சாவழி பெருகுவதற்கும் வாழ்வு நிலைநிறுத்தப்படுவதற்கும் இறைவன் ஏற்படுத்தியிருக்கும் வழிமுறைதான் திருமணம். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு படைப்பும் தங்கள் இணைகள் மூலம் அவற்றின் பங்களிப்பை மிகச் சரியாக நிறைவேற்றி வருகின்றன.


ISBN 978-624-5736-14-0

இந்தப் பேரண்டப் படைப்பில் மனித இனத்தைத் தவிர வேறு எந்தப் படைப்புக்கும் தங்களது பாலுணர்வை தீர்த்துக் கொள்வதற்கென தனிப்பட்ட விதிகள் எதுவும் கிடையாது. ஆண்பெண் உறவுக்கென பிரத்தியேக நிபந்தனைகள் எதுவும் அவற்றுக்கு இல்லை.

ஆனால் மனிதன் அவனது உன்னத நிலை, மகத்துவம், சங்கை ஆகியவற்றை கவனத்திற் கொண்டு வேறு படைப்பினங்களுக்கு இல்லாத அவனது இயல்புக்கு இசைந்து போகும் சில மரபுகளை இறைவன் ஏற்படுத்தி இருக்கின்றான்.

அதன் அடிப்படையில் ஓர் ஆண் ஒரு பெண்ணுடன் பாலுணர்வு சம்பந்தமாக கொள்ளும் தொடர்பு கண்ணியம் மிக்கதாகவும் அவளது விருப்பத்துடனும் இருக்க வேண்டும். இந்த விருப்பத்தை வெளிப்படுத்தும் முகமாக பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு தன்னை திருப்தியுடன் இணையாகக் கொடுத்து மற்றவரை தன்னுடைய இணையாகவும் ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த உடன்படிக்கையை உறுதி செய்வதற்கு சாட்சிகள் இருக்க வேண்டும்.

இதன் மூலம் பாலுறவு உந்துதலைத் தீர்த்துக் கொள்வதற்கு பாதுகாப்பான வழிமுறையையும் சந்ததிகள் நிலைபெறவும் எவர் வேண்டுமானாலும் ஏறி மேய்வதற்கான விளைநிலம் எனும் அவல நிலையிலிருந்து பெண்ணுக்கு பாதுகாப்பையும் வழங்கியுள்ளான் இறைவன். இதனால் குடும்பம் எனும் விதை தாய்மையின் அரவணைப்பிலும் தந்தையின் பாதுகாப்பிலும் ஒரு நல்ல செடியாக வளர்ந்து நன்றாக பழுத்த கனிகளை பலனாகத் தருகின்றது. அல்லாஹ் விரும்பும் வழிமுறையும் இஸ்லாம் ஒப்புக் கொண்ட நெறிமுறையும் இதுவே ஆகும். இவை அல்லாத மற்ற அனைத்து வழிமுறைகளையும் இஸ்லாம் தகர்த்தெறிகிறது.

திருமணம் செய்யுமாறு பலரீதியில் இஸ்லாம் தூண்டுகின்றது. திருமணம் என்பது நபிகளாரின் வழிமுறை என்றும் இறைத்தூதர்களின் நடைமுறை என்றும் கூறியபின் அந்த தலைவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுவது நம் மீது கட்டாயக் கடமை ஆகும் என்றும் இஸ்லாம் வழியுறுத்துகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்.

**உமக்கு முன்பும் தூதர்கள் பலரை நாம் அனுப்பியுள்ளோம். மேலும் மனைவி மக்களுடையவர்களாகவே நாம் அவர்களை ஆக்கியிருக்கின்றோம். (13: 38)**

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஉமாமா (ரலி) அறிவிக்கின்றார். இறையச்சத்துக்குப் பின் ஓர் இறைநம்பிக்கையாளனுக்கு அதிக பயன்தரக்கூடியது ஸாலிஹான மனைவி ஆகும். அவன் கட்டளையிட்டால் அவள் கட்டுப்படுவாள். அவளைப் பார்த்தால் அவன் சந்தோசமடைவான். அவளுடைய விஷயத்தில் சபதம் செய்தால் அவள் அதனை நிறைவேற்றுவாள். கணவன் இல்லாத நேரத்தில் தம் உடலிலும் கணவனின் செல்வத்திலும் நீதி செலுத்துவாள். (இப்னு மாஜா)

மனிதனுடைய மார்க்கத்தில் பாதியை முழுமையடையச் செய்யும் ஒரு வணக்கமே திருமணம் ஆகும். அதன் மூலம் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் தன்னை படைத்த இறைவனை அவனால் சந்திக்க முடியும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள். நல்ல மனைவியை யாருக்காவது அல்லாஹ் வழங்கியிருந்தால் அவனது மார்க்கத்தில் பாதியை

அல்லாஹ் பாதுகாத்து விட்டான். ஆகவே மீதி இருக்கும் பாதியில் அவன் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும். (தபரானீ, ஹாகிம்)

**07. இஸ்லாமிய திருமணத்தின் நுட்பங்கள்**

திருமணத்தின் மூலம் திருமணம் செய்பவருக்கு தனிப்பட்ட முறையிலும் சமுதாயத்தைப் பொருத்தவரை மொத்தமாகவும் மானிட வர்க்கத்திற்குப் பொதுவாகவும் பலவித பயன்கள் ஏற்படுவதால்தான் இஸ்லாம் திருமணத்தை இவ்வளவு தூரம் பின்வருமாறு வழியுறுத்தி ஆசையூட்டுகிறது.

01. உடல் இச்சை என்பது மனிதனுடைய பலம் மிக்க உணர்ச்சிகளில் ஒன்றாகும். அதனைத் தணித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்திற்காக மனிதனை எப்போதும் அது தூண்டிக் கொண்டே இருக்கும். அந்தக் கிளர்ச்சியை சரியான முறையில் அடக்காவிட்டால் அனேக மனிதர்களையும் அது பதற்றம் மற்றும் மன உளைச்சலிலேயே வைத்திருக்கும். இறுதியில் மிகவும் மோசமான ஒரு பாதையின்பால் அது அவனைத் தள்ளிவிடும்.

    மனிதன் தனது பாலுணர்வையும் இச்சையையும் தீர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த இயற்கைக்கு ஒத்துப் போகும் வழிமுறையே திருமணம் ஆகும். மன உளைச்சலில் இருந்து மனிதனை அது தடுக்கின்றது. பதற்றத்தில் இருந்து மனித மனங்களை அது சாந்தப்படுத்துகின்றது. தடைசெய்யப்பட்டவற்றை (ஹராம்) பார்க்கும் மனோபாவங்களில் இருந்து உள்ளங்களை அது திருப்புகிறது. அல்லாஹ் அனுமதித்த வழிமுறையின் மூலம் அன்பும் மனநிறைவும் அடையும்படி செய்கின்றது.

    திருக்குர்ஆன் இதனையே பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது.

    **மேலும் அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான். நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக. மேலும் உங்களிடையே அன்பையும் கருணையையும் தோற்றுவித்தான். திண்ணமாக சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறைய சான்றுகள் உள்ளன. (30: 21)**

    கருணை நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். பெண்கள் சைத்தானின் உருவத்தில் முன்னோக்கி வருகிறார்கள். சைத்தானின் உருவத்திலேயே பின்னோக்கிச் செல்கிறார்கள். ஆகவே எவருக்காவது ஒரு பெண்ணிடத்தில் வேட்கை தோன்றினால் அவர் தமது மனைவியிடத்தில் வரட்டும். அவரது மனதில் இருப்பதை தடுத்து நிறுத்துவதற்கு அதுவே சிறந்த வழியாகும். (முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி)

02. குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் வம்சாவழி பெருகுவதற்கும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து இஸ்லாம் போதிக்கும் குடும்ப பரம்பரைமுறை பாதுகாப்பு பெறுவதற்கும் மனித வாழ்வு பாதுகாப்பான முறையில் கடந்து செல்வதற்கும் மிகச் சிறந்த வழிமுறையே திருமணம் ஆகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள். அதிக அன்பு செலுத்தும் அதிக குழந்தை பேறும் கொண்ட பெண்களை நீங்கள் திருமணம் செய்து கொள்ளுங்கள். ஏனெனில் மறுமை நாளில் உங்கள் மூலம் மற்ற நபிமார்களிடத்தில் நான் பெருமை அடைவேன். (நஸாயீ, அபூதாவூத், அஹ்மத்)

03. மாதா பிதா எனும் உள்ளுணர்வு குழந்தைகளின் நிழலில் வளர்ந்து பரிபூரணம் அடைகின்றது. அந்த உணர்வு மனிதர்களிடையே அன்பு, இரக்கம், கருணை ஆகியவை பிறப்பதற்கான காரணியாக அமைகின்றது. இக்குணங்கள் இல்லாவிடில் மனிதர்களிடையே மனிதத்துவம் பரிபூரணம் அடையாது என்பதும் உண்மையே.

04. திருமணத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகளைக் குறித்தும் குழந்தைகளைப் பேணிப் பாதுகாப்பது குறித்தும் ஏற்படும் உணர்வு மனிதனுடைய ஆற்றல்கள் அதிகரிப்பதற்கும் திறமைகள் வெளிப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது. தனது பொறுப்புக்கள் கடமைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக அவன் வேலை செய்வதற்கு தயாராகின்றான். உற்பத்தி அதிகரிப்பதற்கு அது காரணியாக அமைகின்றது. உற்பத்தி அதிகரிக்கும்போது அவற்றைப் பாதுகாப்பதற்கும் இன்னும் அதிக தயாரிப்புகளை உருவாக்குவதற்கும் அது மேலும் காரணமாக அமைகின்றது. இதன்மூலம் இப்பேரண்டத்தில் அல்லாஹ் படைத்து வைத்துள்ள மனிதர்களுக்கு பயன்தரக்கூடியவற்றை வெளிக்கொணர்வதற்கு அந்த உணர்வுதான் அவனை உந்துகிறது.

05. ஒருபுறம் வீட்டு விவகாரங்களையும் மறுபுறம் வீட்டிற்கு வெளியே இருக்கும் விவகாரங்களையும் ஒழுங்குபடுத்தி ஒவ்வொருவரும் அவர்களுக்கான கடமையை செவ்வனே நிறைவேற்றும் தனித்தன்மையை திருமணம்தான் பகிர்ந்து கொடுக்கின்றது. இதன்மூலம் கணவனும் மனைவியும் தங்களுடைய பணிகளை பொறுப்புடன் சரிவர நிறைவேற்ற முடிகின்றது.

இந்நிலையில் மனைவியானவள் வீட்டு விவகாரங்கள், வீட்டுப் பராமரிப்பு, குழந்தை பராமரிப்பு ஆகியவற்றை சரிவர நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கிறாள். கணவன் தனது கவலைகளை மறப்பதற்கும் புத்துணர்ச்சி பெறுவதற்குமான சூழ்நிலையை அவள் வீட்டில் உருவாக்குகிறாள். அதேசமயம் ஆண்மகன் வீட்டுச் செலவினங்களுக்கான சம்பாத்தியத்தை தேடி விரைகின்றான்.


ISBN 978-624-5736-14-0

இவ்வாறு ஒவ்வொருவருக்குமான கடமைகள் நீதமாக பகிர்ந்து கொடுக்கப்பட்டதன்மூலம் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கான பொறுப்புக்களை அல்லாஹ் திருப்தியுறும் வண்ணமும் மக்கள் புகழும் வண்ணமும் செவ்வனே நிறைவேற்ற முடியுமாகின்றது. மேலும் இதன் மூலம் அருள்வளம் மிக்க பிரதிபலன்களும் கிடைக்கின்றன.

06. இஸ்லாம் அதிமுக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தும் இரத்த பந்த உறவுகள் குடும்பங்களுக்கிடையே இணக்கங்கள், சமூகத் தொடர்புகள் ஆகியவை வலுப்பெறுவதற்கு திருமணம் முக்கிய காரணியாகவும் உதவியாகவும் அமைகின்றது. பரஸ்பரம் அன்புடனும் இணக்கத்துடனும் வாழும் சமூகமே மகிழ்ச்சியும் பலமும் மிக்க சமூகம் ஆகும்.

07. 1959 ஜுன் 6ஆம் திகதி (The people's news paper) என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அறிக்கை இவ்வாறு கூறுகின்றது. திருமணம் செய்து வாழ்பவர்கள் திருமணம் செய்யாமல் வாழ்பவர்களைவிட நீண்ட நாட்கள் உயிர் வாழ்கிறார்கள். அவ்வாறு திருமணம் செய்யாமல் வாழ்பவர்கள் விதவைகள், மணவிலக்கு பெற்றவர்கள், பிரம்மச்சாரிகள் யாராக இருந்தாலும் சரியே.

## 07. களுத்துறை பிரதேச மக்களிடையே விவாகரத்து வழக்குகள் அதிகரித்து செல்கின்றமைக்கான காரணிகள்

தற்கால சூழ்நிலையைப் பொருத்தமட்டில் களுத்துறை பிரதேசத்தில் விவாகரத்து வழக்குகள் தொடர்தேச்சையாக அதிகரித்து செல்கின்ற ஒரு போக்கை காணக்கூடியதாக உள்ளது. இதற்கான காரணங்கள் பல.

### 1. தான் எதிர்பார்க்கின்ற சொத்தை மணமகன் அடைய முடியாதிருத்தல்

திருமணப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே பெண் வீட்டில் வீடு தருவார்களா என்ன தருவார்கள் என தரகர்களை வைத்து சிலவேளை மணமகனின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் தாமாக மணமகள் வீட்டில் கேட்டு விடுகின்றனர். சிலர் இதற்கு விதிவிலக்காகவும் உள்ளனர். பெண் வீட்டாரும் ஏதாவது தருவதாக வாக்களித்துவிடுகின்றனர். ஆயினும் சிலவேளை திருமணத்தின் பின்னர் அவர்கள் கேட்டதை பெண் வீட்டாரால் முழுவதுமாக வழங்க முடிவதில்லை. இதனால் அவர்களிடையே பிணக்கு ஏற்படுகின்றது. இதனால் மணப்பெண்கள் கணவனின் பக்கத்திலிருந்து இன்னல்களை அனுபவிக்க வேண்டி ஏற்படுகின்றது. இது பின்னாட்களில் அவர்களை விவாகரத்தின் பக்கம் இட்டுச் செல்கின்றது.

### 2. அதிகரித்த போதைப் பொருள் பாவனை

போதைப் பொருளுக்கு அடிமையாதல் என்பது களுத்துறை பிரதேச இளைஞர்கள் மத்தியில் சர்வசாதாரணமாக மாறி வருகின்றது. அதிகமானோர் போதை தரக்கூடிய பொருட்களை உபயோகிக்கின்றனர். திருமணத்தின் பின்னர் இதனை அறிந்து

கொள்ளும் மணமகளும் அவளது குடும்பமும் கணவனிடமிருந்து விவாகரத்து பெறுவதை இதற்கான தீர்வாக காண்கின்றனர்.

**3. பெற்றோரின் அநாவசியத் தலையீடு**

திருமணமான தம்பதிகளிடையே சில கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கை. வெவ்வேறு சூழலில் பிறந்து வளர்ந்த வெவ்வேறு சிந்தனை மனப்பாங்கு கொண்ட இருவர் வாழ்வில் ஒன்றிணையும்போது அவர்களது கருத்துக்கள் சிந்தனைகள் கட்டாயம் ஒத்துப்போக வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. திருமணத்தின்பின் கணவன் மனைவியிடையே ஏற்படும் பிரச்சினைகளில் களுத்துறை பிரதேசத்தை பொறுத்தவரையில் மணமகனின் மணமகளின் பெற்றோரின் தலையீடு அதிகமாக காணப்படுகின்றது. சுமுகமாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இவர்களது தலையீடுகளால் விவாகரத்தில் சென்று முடிவடைகின்றது. மணமகனும் மணமகளும் சில வேளைகளில் இணைந்துவாழ விரும்பினாலும் பெற்றோர் தமது பிள்ளையை மீண்டும் அந்த வாழ்விற்குள் நுழைவிக்க விரும்புவதில்லை. இதனால் விவாகரத்து இடம்பெறுகின்றது.

**4. கணவனிடமிருந்து செலவுத்தொகை பெற விரும்பும் பெண்கள் விவாகரத்து செய்கின்றனர்.**

ஒரு ஆணைப் பொருத்தவரையில் மனைவிக்கும் பிள்ளைகளுக்குமான உணவு உடை உட்பட அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்து கொடுப்பது அவனது கடமை. ஆயினும் சில ஆண்கள் இதனை சரியாக நிறைவேற்றுவதில் தவறி விடுகின்றனர். மனைவியினதும் பிள்ளைகளினதும் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதில்லை. விவாகரத்து பெற்றபின் குறித்த செலவுத்தொகையை கணவன் மாதாமாதம் தனக்கு வழங்கியே ஆகவேண்டும் என நம்பும் பெண் இத்தகைய ஒருவனுடன் வாழ்வதைவிட விவாகரத்து பெறுவது மேல் என்ற முடிவுக்கு வருகின்றாள். விவாகரத்து பெற்ற பின் மாதாமாதம் கணவன் வழங்கும் செலவுத்தொகையை கொண்டு தன் வாழ்வை நடாத்திவிட முடியும் என்ற நம்பிக்கையில் பெண் தானாக முன்வந்து விவாகரத்து பெற்றுக் கொள்கின்றாள்.

**5. மார்க்க உணர்வின்மை**

அடுத்த முக்கிய காரணம் என்னவெனில் பலருக்கு இஸ்லாமிய வரையறைகளுக்குட்பட்டதாக, விதிமுறைகளுக்குட்பட்டதாக வாழ்வை கொண்டு செல்வதில் உடன்பாடு இல்லை. வாய்வார்ததைகளில் தம்மை முஸ்லிம்கள் என கூறிக்கொள்கின்றனர். ஆயினும் திருமணம் என்ற ஒரு விடயம் வருகின்றபோது தமது மார்க்கத்தை மறந்து அநாகரிகத்தில் ஈடுபடுகின்றனர். இஸ்லாமிய விதிமுறைகளுக்கு உட்பட்டதாக தம் திருமண வாழ்வை ஆரம்பித்தாலே பல பிரச்சினைகள் தீர்ந்து விடும்.

**6. ஈமானிய பலவீனம்**

அதுதவிர மார்க்கத்தில் தெளிவுள்ளோரும் இஸ்லாத்தில் அடிப்படையிலானதாக தம் திருமண வாழ்வை ஆரம்பிக்க பெரும்பாலும் விரும்புவதில்லை. இதற்கான காரணம் அவர்களது ஈமானிய பலவீனம் ஆகும். மார்க்கத்தில் தெளிவிருப்போரும் பொதுவாக தமது திருமண நிகழ்வானது விமரிசையாக கோலாகலமாக நடாத்தப்பட வேண்டும் பெண் வீட்டாரிடம் சீதனம் ஏதாவது வாங்க வேண்டும். அதனைக் கொண்டு தம் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

## 08. அதிகரித்துவரும் விவாகரத்து வழக்குகளை குறைப்பதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள்

களுத்துறை பிரதேசத்தில் அதிகரித்து வருகின்ற விவாகரத்துகளை குறைக்க வேண்டிய, அதனூடாக சிறந்ததொரு சமூகத்தை உருவாக்க வேண்டியது பிரதேசவாசிகள் அனைவரினதும் பொறுப்பாகும். இதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்தலாம்.

### 8.1 திருமணம் முடித்து குடும்பமாக வாழ்வதன் முக்கியத்துவம் உணர்த்தப்படல்

திருமணம் என்பது ஓர் புனிதமான ஒப்பந்தம். வெறுமனே சமூகத் தேவைக்காக அல்லது உடலியற் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக எவரும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆணும் பெண்ணும் சுவனம் வரையில் இவ்வுறவை வெற்றிகரமாக கொண்டு செல்ல வேண்டும். அவ்வுறவின் மூலமாக பிறக்கின்ற பிள்ளைகளை சுவனத்துக்குரியோராக, ஒழுக்க சீலர்களாக, நற்பிரஜைகளாக வளர்ப்பது அத்தாயினதும் தந்தையினதும் பொறுப்பு. அதேபோல திருமண உறவின் மூலமாக ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்னும் பல உறவுகள் அதிகரிக்கும். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து மகிழ்ச்சிகரமாக ஒரு வாழ்வை நடாத்த வேண்டியது அந்த ஆணினதும் பெண்ணினதும் கடமை ஆகும். இத்தகைய விடயங்களை முதலில் பெற்றோர் தமது திருமணம் முடிக்க இருக்கின்ற பிள்ளைகளுக்கு தெளிவுறுத்த வேண்டும்.

### 8.2 திருமணத்திற்கு முன்னர் விசேட வகுப்புக்களை நடாத்தல்

திருமணத்தின் முக்கியத்துவம், வெற்றிகரமான திருமண வாழ்விற்கு அத்தியாவசியமான விடயங்கள், ஹலாலான நிகாஹ், அதன் நடைமுறைகள், கணவன் மனைவியின் கடமை உரிமைகள், குழந்தை வளர்ப்பு போன்ற விடயங்களை இஸ்லாமிய அடிப்படையில் கற்பிப்பதனூடாக அவர்கள் சில விடயங்களை புரிந்து கொள்வதற்கும் இஸ்லாத்தின் அடிப்படையில் தமது வாழ்வை நடாத்திச் செல்வதற்கும் இலகுவாக இருக்கும்.

### 8.3 திருமணம் முடித்துக் கொடுக்கும் பெற்றோருக்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்

பிள்ளைகள் வளர்க்கப்படும்போது அவர்கள் ஆணோ பெண்ணோ எவராக இருப்பினும் சில ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுப்பது பெற்றோரின் கடமை. சிறு வயதிலிருந்தே


ISBN 978-624-5736-14-0

நல்லொழுக்கத்துடன் வளர்க்கப்படும் பிள்ளை வளர்ந்த பின்பும் நற்பிரஜையாக, நல்ல கணவனாக, நல்ல மனைவியாக, சிறந்த பெற்றோராக வாழ்கின்றது.

அதேபோல வீட்டிற்கு வருகின்ற மருமகன் மருமகளோடு மாமனார் மாமியார் நடந்து கொள்ள வேண்டிய முறைகளும் இஸ்லாமிய வழியில் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். முக்கியமாக அவர்கள் தமது மகனுக்கு மகளுக்கு ஒரு துணையையே தேர்வு செய்கின்றனர். அதுதவிர தம் மகனுக்கு தமது வீட்டுக்கு ஒரு அடிமையையோ வேலைக்காரியையோ தேர்ந்தெடுக்கவில்லை என்பதை தெளிவுறுத்த வேண்டும். பெற்றோர் தமது மகன் மகளுடன் எவ்வளவு அன்பாக நடந்து கொள்கின்றார்களோ உதவி ஒத்தாசைகள் புரிகின்றார்களோ அதேபோன்று திருமணம் முடித்து வருகின்ற மருமகனுடனும் மருமகளுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

### 8.4 குழந்தை வளர்ப்பு தொடர்பான விளக்கங்களை வழங்கல்

பிள்ளைகள் என்பவர்கள் வெறுமனே நாம் எமது தேவைகளை பெற்றுக்கொள்பவர்களல்லர். அவர்கள் அல்லாஹ்வால் எமக்கு வழங்கப்படுகின்ற ஓர் அமானிதம். அவர்களை சிறந்த முறையில் வளர்ப்பது கல்வி அறிவை வழங்குவது பெற்றோரின் கடமை. அத்துடன் சிறு பராயம் முதலே இஸ்லாமிய நல்லொழுக்க விழுமியங்களை ஊட்டி வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும். உறவுகள் எனப்படுபவர்கள் யாவர்? அவர்களுடன் எவ்வாறு நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக தெளிவூட்டி வளர்க்க வேண்டும். ஸாலிஹான பிள்ளைகளாக, பொறுமைசாலிகளாக, மன்னிக்கும் உளப்பக்குவம் கொண்டோராக, சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வோராக பெற்றோர் தம் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஒரு பிள்ளை என்பதைவிட ஒரு சமுதாயத்தையே பெற்றோராகிய அவர்கள் அதன் மூலம் உருவாக்குகிறார்கள் என்பதை மனதிற் கொள்ள வேண்டும்.

### 8.5 இஸ்லாமிய திருமணம் தொடர்பான தெளிவையூட்டல்

இஸ்லாமிய திருமணம் எனப்படுவது யாது? எவ்வாறான திருமணத்தினூடாக நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று வெற்றிகரமானதொரு வாழ்வை கொண்டு செல்லலாம்? என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும் முக்கியமாக திருமண நிகழ்வானது இஸ்லாமிய வழிமுறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டியது கட்டாயமாகும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருளையும் திருப்தியையும் பெற முடியும்.

### 8.6 ஆலோசனைக் குழுக்களை நியமித்தல்

திருமணம், குடும்ப வாழ்வு பற்றிய விளக்கம் அளிப்பதற்கும் சிக்கலான நிலைமையில் தீர்வு வழங்குவதற்கும் ஆலோசனை குழுக்கள் ஒவ்வொரு மட்டத்திலிருந்தும் அமைக்கப்பட வேண்டும். மேலும் இது விடயத்தில் முஸ்லிம் சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள் முதலியோருக்கு விளக்கமளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தலில் அவர்களது ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

அத்துடன் சொத்து விடயத்தில் பிரச்சினைக்குள்ளானோரை கண்டு முஸ்லிம் தனியார் சட்டத்தோடு தொடர்பானோரின் உதவியுடன் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். காதி நீதிமன்றங்களில் சொத்து பிரிப்பு தொடர்பான பிரச்சினைகளினால் பிணக்குகளுடன் வாழும் தம்பதியினர் மத்தியில் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கான விசேட நிகழ்வுகளை இதற்காக ஒழுங்குபடுத்த வேண்டும்.

**8.7 சீதன ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ளல்**

எதிர்கால சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் பாரியதொரு பொறுப்பு மிக்க நடவடிக்கையே திருமணம். இருவரும் ஒரு பெரும் அமானிதத்தையே சுமக்கிறார்கள் என்ற கருத்து திருமணம் முடிக்க இருப்பவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். இதனால் வீண் ஆடம்பரமும் கேளிக்கைகளும் திருமண நிகழ்வில் குறைவதோடு சீதனம் பற்றிய எண்ணமும் குறைவதற்கு வழிவகுக்கும். சீதனம் ஒரு பாவமான செயல், ஹராமான நடத்தை என்ற கருத்தை சமூக அபிப்பிராயமாக மாற்றலாம். இளைஞர்களின் பங்களிப்புடன் சீதன எதிர்ப்பு இயக்கத்தை உருவாக்கி அதன் மூலம் சீதன ஒழிப்பு செயற்றிட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

**8.8 முஸ்லிம்களை ஷரீஆ சட்டங்களின்படி வாழ வழிசெய்தல்**

இஸ்லாமிய சட்டத்திற்கு மாற்றமான சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றுவது பித்அத்தாகும். மார்க்கத்தில் இல்லாத ஒன்றை செய்த குற்றம் அத்தகைய மனிதனையே சாறும் என்ற விடயம் உணர்த்தப்பட வேண்டும். இஸ்லாத்திற்கு முரணான நடைமுறைகள், வழக்காறுகள் ஒழிக்கப்பட்டு இஸ்லாமியரீதியான வாழ்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் முஸ்லிம்களது ஈமானை பலப்படுத்தி, ஆன்மீக சிந்தனையை கூட்டி, சுயநல சிந்தனைகளை நீக்கி, மார்க்கத்தோடு தொடர்பை கூட்ட வேண்டும். அத்துடன் முஸ்லிம்களை இஸ்லாத்தோடு இணைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

**9. கண்டறிந்தவை**

களுத்துறை பிரதேசமுஸ்லிம்களில் பலர் பெரும்பாலும் பல வகைகளிலும் இஸ்லாமிய சட்டத்தை மையமாகக் கொண்டதாக தமது வாழ்வை அமைத்துக் கொண்டாலும் திருமணம், குடும்ப வாழ்வு தொடர்பில் விழிப்புணர்வற்று திடீர் முடிவுகளை எடுப்போராக காணப்படுகின்றனர். சமூகப் பொறுப்பு மிக்க தலைவர்கள் இது விடயத்தில் கரிசனை கொண்டு செயற்படுவதன் மூலம் சமூகத்தில் பாரியதொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

**10. ஆய்வு முடிவு**

இஸ்லாமிய குடும்ப வாழ்வின் சட்டங்கள் தொடர்பிலான அல்லாஹ்வின் வசனங்கள் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டனவாகவும் பாரதூரமானவையாகவும் இருந்தபோதிலும் அதன் அவசியம் ஆய்வுப் பிரதேசமாகியகளுத்துறை பிரதேசமுஸ்லிம்களால் உணரப்படாமல் உள்ளது. மேற்கூறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை மாற்றுவதற்கான வழிவகைகளை செயற்படுத்துவதன் ஊடாக நிச்சயம் முஸ்லிம்களின் ஈமானை பலப்படுத்தி,அதனை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளை

மேற்கொள்ளலாம். இதனால் முஸ்லிம் சமூகத்தில் மிகச் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

## 11. உசாத்துணைகள்


1. அகார் முஹம்மத். ஏ.ஸி., (2019), **“மிம்பர் மேடை”,** கொழும்பு: அல்ஹஸனாத் பப்ளிகேஷன்.
2. அப்துல் லதீப் எம். ஏ. எம்., (2009), **“விவாகம் (ஷரீஅத் சட்ட விளக்கங்கள்)”,** அக்கரைப்பற்று: ஜின்னாஹ் வெளியீட்டகம்.
3. அப்துல் வஹ்ஹாப், (2004), **“திருமணம்”**, சென்னை: யுனிவர்ஸ் பப்ளிகேஷன்.
4. அன்வாருத்தீன் பாகவி.ஏ., (1992), **“இஸ்லாம் இயம்பும் பாகப்பிரிவினை”**, தஞ்சாவூர்: காஜியார் புக் டிப்போ.
5. அஸீஸ். ஏ.எம்.ஏ,(2007) **“இலங்கையில் இஸ்லாம்”,** கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.
6. கமாலுத்தீன் ஆலிம். வா., (1996), **“திருமணத்தின் சிறப்பு”**, சென்னை: ஸலாமத் பதிப்பகம்.
7. முஹம்மத் அக்ரம், (2001), **“நடைமுறைக்கேற்ற இஸ்லாம்”**, பஸ்யால: முஸல்மன் பப்ளிகேஷன்.
8. ஸைய்யத் சாபிக், (2017), **“ஃபிக்ஹுஸ் ஸுன்னா - இஸ்லாமிய சட்டக் கருவூலம் (திருமணம்)”**, சென்னை: இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட்.


**நேர்காணல்**

1. நஸீர் மாஸ்டர்., (பிரதேச காதி நீதிபதி), 2021.04.24, நேரம் மு.ப 10.00-12.00
2. முஈத். எம்.எஸ்.எம்., (பள்ளி தலைவர்), 2021.04.25, நேரம் மு.ப 9.00-10.00
3. நாஜிபா (ஓய்வு பெற்ற அதிபர் க.மு.ம.ம.வி), 2021.05.02, நேரம் பி.ப 2.00-3.00
4. நிஹாரா. எம்.எஸ்.எப், (ஆசிரியர்), 2021.05.04, நேரம் 2.00-3.00
5. ஸமீனா (விவாகரத்து பெற்றவர்), 2021.05.03, நேரம் மு.ப 9.30-10.30
6. நிஹால் (விவாகரத்துக்கு விண்ணப்பித்தவர்), 2021.05.10, நேரம் மு.ப 11.00-11.30
7. ஸலாம் (விவாகரத்து பெற்றவரின் தந்தை), 2021.05.18, றேரம் பி.ப 3.00-4.00